THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, while I express my thanks to the Hon. Minister for his kind reply, I may say that Hosur is the only taluk through which the entire traffic from Bangalore side has to come to Madras State and vice-versa. We do not have direct buses from Bangalore—Madras via Hosur.
மு. ப. 10-00 Thousands of people are coming from Mysore State to South and people who have taken appointments frequently come from Bangalore. We have got only one bus from Bangalore to Madras and it is always crowded. There is lot of traffic and Hosur becomes a bottleneck. If more direct buses are allowed to ply to Tiruchi, Madurai and other places via Hosur, we can avoid the bottleneck. Will the Hon. Minister order for more direct buses?

THE HON. THIRU SI. PA. ADITANAR: I mentioned a number of routes between Bangalore and Hosur which have been allotted to Tamil Nadu under the Inter-State agreement. The operation and implementation of this agreement are under consideration and under process. Due consideration will be given to the suggestion given by the hon. Member.

THIRU B. VENKATASWAMY: May I know whether there is any proposal to introduce upstair buses between Bangalore and Madras in view of the heavy passenger traffic?

THE HON. THIRU SI. PA. ADITANAR: The matter is again under consideration. This is an inter-State matter and anything to be done has to be done by agreement between the two States.

ஏலக்காய் பயிரிடுதல்

* 264 வினா.—திரு. டி. எஸ். ஆதிமூலம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டிலாகாவின்மூலம் ஏலக்காய் விவசாயத்திற்கு குத்தகைக்கு விடும் நிலம் ஒரு நபருக்கு எவ்வளவு ?

(இ) இந்த அளவில் ஜில்லாவுக்கு ஜில்லா வித்தியாசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஏலக்காய் பயிரிடுவதற்காக 50 ஏக்கருக்கு மேற்பட்ட காட்டு இலாக்கா நிலம் எவருக்கும் குத்தகைக்கு விடப்படமாட்டாது.

(இ) எல்லா மாவட்டங்களிலும் ஒரேவிதமான விதிதான் பின்பற்றப்படுகிறது.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: சார், கோயம்புத்தூர் ஜில்லாவிற்கு மாத்திரம்தான் இந்தச் சட்டத்திலேயிருந்து விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதன் விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

1969 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : 1961-ஆம் ஆண்டு அப்படி ஒரு விதிவிலக்கு கொடுக்கப்படுகின்ற சூழ்நிலை இருந்தது. இப்பொழுது சி.சி.எஃப்-னுடைய பரிந்துரையின் பேரில் எல்லா மாவட்டங்களுக்கும் ஒருவிதமான விதிதான் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க இப்பொழுது ஒரேவிதமான விதிதான் பின்பற்றப்பட்டு வருகிறது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவரவர்களே, பொதிகை மலையில் இருக்கும் அடர்ந்த காடுகளில் இயற்கையாகவே ஏலக்காய் பயிராகியிருக்கிறது. அதைப் பரிசிலனை செய்து அவைகளைக் குத்தகைக்கு விடும் அளவுக்கு அரசு முயற்சிக்குமா? அதனால் அரசாங்கத்திற்குப் போதிய வருவாய் கிடைக்குமென்று நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நல்ல காரியங்களைப் பரிசிலிக்கலாம். ஆனல், குத்தகைக்கு விடுகின்ற முறையில் எங்கெங்கு ஏலக்காய் வரும் சாத்தியக்கூறு இருக்கிறது என்று பரிசிலித்து நாங்கள் விட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். ஏலக்காய் வருவதாகயிருந்தால் விடலாம்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், இந்த ஏலக்காய் விளையக்கூடிய நிலங்களை அரசாங்கம் கூடுதலாக எத்தனை வருஷம் வரை குத்தகைக்கு விடலாம் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்பொழுது இருக்கின்றபடி 25 ஆண்டுகாலம்தான் விடப்படும்.

திரு. மா. பா. சாரதி : தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் ஏலகிரி மலையிலும், ஜவ்வாது மலையிலும் ஏலக்காய் விளையும் நிலம் இருக்கிறது. அதை சர்க்கார் குத்தகைக்கு விடமுற்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மாநிலத்திலே எங்கேயாவது ஏலக்காய் விளையும் தகுதியுள்ள நிலங்கள் இருந்து, 50 ஏக்கருக்குக் கீழே எவ்வளவு கேட்டாலும், அதற்கு மேல் இல்லாத அளவுக்குக் கொடுத்துக் கொண்டுவருகிறோம். அப்படியிருந்தால் கொடுக்கலாம்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : இப்பொழுது காடுகளைக் குத்தகைக்கு தனியாருக்கு விடுவதற்குப் பதிலாக கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளுக்கு விடப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்பொழுதுதான் அந்தத் திட்டம் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : சார், ஏலக்காய் தோட்ட விஷயத்திலே மாத்திரம்தான் உச்சவரம்பு 50 எக்கரா? மற்ற காட்டு விளைபொருள்களுக்கும் உச்சவரம்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஒவ்வொருவிதமான நிலத்திற்கு ஒவ்வொரு வரம்பு இருக்கிறது. ஏலக்காயைப் பொறுத்தவரையில் 50 ஏக்கராவுக்குக் கீழே.

'அமிர்தி காடு'

* **265 வினா.—திரு. மா. பா. சாரதி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காட்டிலுள்ள 'அமிர்தி காட்டை' (Amirthy Forest) அபிவிருத்தி செய்யும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

(இ) வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

(உ) ஆம் எனில், எவ்வளவு செலவில்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) அமிர்தி குன்னிகுளம் சாலை வேலை 1969-70-ல் துவக்கப்பட்டிருக்கிறது?

(உ) ரூபாய் 40,000 சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. மா. பா. சாரதி: தலைவரவர்களே, அமிர்தி காட்டில் சுற்றுலாப் பயணிகள் அவ்வப்பொழுது அதிகமாக வந்து, போவதால் மேலும் விரிவுபடுத்தி, சுற்றுலா மாளிகையை சீர்செய்து அங்கு அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அது சுற்றுலா இடமாக இருப்பதுபற்றி அரசாங்கத்திற்குக் கவனம் இருக்கிறது. சாலை வசதிக்காக 40,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரை 'சாங்க்சுவரி' அமைக்க வேண்டுமென்று கேட்ட சமயத்திலே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 'ஒர்க்கிங் போர்ட்' மூலமாகப் புதிதாக அமைக்க வேண்டாம், ஏற்கெனவே உள்ள 'சாங்க்சுவரி'-யை விரிவுபடுத்த வேண்டும், 'ஸூ'-க்களைக் கண்காணிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே செய்து வருகிறோம். நல்ல போக்குவரத்து வசதியை ஏற்படுத்த வேண்டுமென்று 40,000 ரூபாய் சாங்ஷன் செய்திருக்கிறோம்.

திரு. மா. இராசாங்கம்: தலைவரவர்களே, இந்த அமிர்தி காட்டைப் போல், தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் ஏராளமான காடுகள் மலையோரங்களில், மரங்கள் இல்லாமல், வேறு எதுவும் உண்டாகாமல், ஆனால் விவசாயத்திற்குப் பயனுள்ள இடங்களாகப் பல மலையடிவாரங்கள் இருக்கின்றன. அவற்றை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் முறையில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இப்பொழுதே குமரி சாகுபடி என்று குத்தகைக்கு விடப்படுகிறது. ஆனால், இப்பொழுதிருக்கும் நிலம், அண்மையிலுள்ள மாநிலங்களை, பல மாநிலங்களை ஒத்துப்